# சரியான பார்வை... சரியான வழி... சரியான செயல்! 1





– தா.நெடுஞ்செழியன்

ஒவ்வொரு நாட்டின் எதிர்காலமும் இளைஞர்களின் கைகளில் இருக்கிறது. இளைஞர்களின் எதிர்காலமோ அவர்கள் கற்கும் கல்வியில் இருக்கிறது. எது நல்ல கல்வி? எது இளைஞர்களின் திறமையை வளர்க்கும்? வருங்காலத்தில் வரக் கூடிய எல்லா பிரச்னைகளையும், சவால்களையும் சமாளிக்கும் ஆற்றலை எந்தக் கல்வி கொடுக்கும் என்பது பற்றியெல்லாம் நாம் நிறையப் பேச வேண்டியிருக்கிறது. வலிமையான இளைஞர்களை உருவாக்கினால்தான் வலிமையான நாட்டை உருவாக்க முடியும்.

இப்போது பெற்றோர்களிடமும், மாணவர்களிடமும் ஒரு தவறான புரிதல் இருக்கிறது. வேலைக்காக கல்வி என்று முன்னிலைப்படுத்தப்படுகிறது. கல்வியை அம்மாதிரி வரையறுப்பது மிக மிகத் தவறு.

ஒரு பத்து வருஷத்துக்கு முன்பு மொபைல் எப்படி இருந்தது, அடுத்த பத்து வருஷத்தில் மொபைல் எப்படி இருக்கும், தொழில்நுட்பம் எப்படி எல்லாம் மாறும் என்று யாராலும் சொல்ல முடியாது. எல்லாம் மாறிக் கொண்டே இருக்கிறது. மாறுதல்கள் மட்டுமே நிலையானவை. அந்த மாறுதல்களுக்கு ஏற்றவாறு மாணவர்களை – அவர்கள் உலகத்தின் எந்த மூலைக்குச் சென்றாலும், எந்த ஒரு சூழலையும், எந்த ஒரு சவாலையும் அவர்கள் கற்ற கல்வியைப் பயன்படுத்தி எளிதாகச் சமாளிக்கக் கூடிய தன்னம்பிக்கையைத் தருவதுதான் கல்வி. எனவே வேலைக்காகக் கல்வி என்பது நிச்சயமாகக் கிடையாது.

நம் எல்லாருக்கும் சுந்தர்பிச்சையைத் தெரியும். 'கூகுளுக்குச் CEO ஆவேன்' என்று நினைத்து அவர் பள்ளி, கல்லூரிகளில் படிக்கும்போது படிக்கவில்லை. அவர் படிக்கும்போது எதைப் படித்தாலும் தெளிவாகவும், புரிந்து கொண்டும் படித்தார். அப்படிப் படித்ததனால் அவரால் எந்த ஒரு சூழலிலும், எந்த ஒரு சவாலையும் எளிதாக எதிர்கொள்ள முடிந்தது.

இன்னொன்று ஸ்கோப் இருக்கும் என்று நினைத்துப் படிப்பது. இந்த ஃபீல்டு எடுத்தால் இன்னும் நான்கு வருடம் கழித்து நன்றாக இருக்கும்; அதிக சம்பளம் கிடைக்கும் என்பதற்காக ஒரு குறிப்பிட்ட துறையைத் தேர்ந்தெடுப்பது. இதுவும் சரியில்லை.

ஏனென்றால் இந்தத்துறை, அந்தத் துறை என்றில்லை; எல்லாத்துறைகளிலுமே எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளன. இந்தத் துறையைப் படித்தால் நல்லது, இந்தத் துறையைப் படித்தால் நல்லதில்லை என்று நினைக்கக் கூடாது. மேலும் இப்போதுள்ள மாணவர்களுக்கு கல்வியில் உள்ள பல துறைகளைப் பற்றித் தெரியாது. அவற்றைப் பற்றிய புரிதலும் அவர்களிடம் இல்லை.

இப்போது எல்லாராலும் பொறியியல், மருத்துவம் என்ற இரண்டு மட்டும்தான் முன்னிலைப்படுத்தப்படுகிறது. ஆனால் இவை தவிர, எண்ணற்றதுறைகள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இவற்றையெல்லாம் படிக்கலாம் என்று மாணவர்களிடம் சொல்ல வேண்டும். ஆனால் அப்படி விழிப்புணர்வை ஏற்படுத்தும் தரமான சூழல் இப்போது நமது கல்வி உலகில் இல்லை.

தற்போது பள்ளிக் கல்வி என்பது தனியாக ஆற்றுக்கு அந்தப் பக்கம் இருக்கிறது. உயர்கல்வி என்பது ஆற்றுக்கு இந்தப் பக்கம் இருக்கிறது. இந்த இரண்டையும் இணைக்கக் கூடிய பாலம் என்று எதுவுமில்லை. இதனால் மாணவர்களுக்குப் பள்ளியைத் தாண்டி கல்லூரிகளில் என்னென்ன படிப்புகள் இருக்கின்றன என்று கூடத் தெரியாது.

1948–இல் டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் தலைவராக இருந்த முதல் கல்வி ஆணையத்தில் டாக்டர் ஏ.எல்.முதலியார், டாக்டர் சாகா போன்ற கல்வியாளர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். அந்த குழுவானது, இந்தியாவின் கல்விமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்று 1948–இல் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதுவே இந்திய நாட்டுக்கு அளிக்கப்பட்ட மிகச் சிறந்த கல்விக் கொள்கையாகும். அதில்தான் ஆரம்ப கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை அதாவது கேஜி யிலிருந்து பிஎச்டி வரை ஒரே வளாகத்தில் இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தனர். அப்போதுதான் ஆறாவது படிக்கும் ஒரு பையனுக்கு ஒரு டாக்டர் என்ன செய்வார் என்பது தெரியவரும். ஒரு வளாகத்தில் டாக்டர், என்ஜினியர், சயின்டிஸ்ட் என்று எல்லாரும் சேர்ந்து ஒன்றாக வேலை செய்தார்கள் என்றால், நிறைய ஆராய்ச்சிகள் செய்ய முடியும். ஒருதுறையின் வளர்ச்சி இன்னொரு துறையின் வளர்ச்சிக்கு உதவும். நிறையப் பேர் ஆராய்ச்சி கட்டுரைகள் வெளியிடுவார்கள். அதனால் இந்தியா உலகத் தர அளவில் உயர்ந்து நிற்கும் என்று டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் கூறினார்.



ஏ.எல்.முதலியார்



டாக்டர் ராதாகிருஷ்ணன்



டாக்டர் சாகா

இந்தியாவில் வாரணாசி பல்கலைக்கழகத்தைத் தவிர, அம்மாதிரி கல்வி கற்கும் முறை எங்கேயும் இதுவரை வரவில்லை. ஆனால் நாம் இதுவரை இந்தக் கல்விக் கொள்கைக்கு நேர்மாறான பாதையிலேயே சென்று கொண்டிருக்கிறோம்.

எது தரமான கல்வி, எது தரமற்ற கல்வி என்று பிரித்தறியும் திறன், அனுபவம் பெற்றோருக்கும் கிடையாது. மாணவர்களுக்கும் இல்லை.

நமது நாட்டு மக்கள் தொகையின் அடிப்படையில் நமது நாட்டு இளைஞர்களின் சராசரி வயது 27. உலகிலேயே இளம்தலைமுறையினர் அதிகமாக இருக்கும் நாடு நம் இந்தியா மட்டும்தான். பிற நாடுகளில், சீனாவில் இளைஞர்களின் சராசரி வயது 37. அமெரிக்காவில் 38. இங்கிலாந்திலோ 40. அதனால்தான் உலக அளவில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் அது காமன்வெல்த் ஆகட்டும், ஒலிம்பிக் ஆகட்டும் , எந்தவொரு போட்டியாகட்டும் நமது இளைஞர்கள் சாதிக்க முடியும். எனவே இளைஞர்களின் ஆற்றல்களை, திறமைகளை ஒருமுகப்படுத்தி சரியான வழிமுறைகளின்படி அவற்றை வெளிப்படுத்த முடிந்தால், நம்மால் நிறையச் சாதிக்க முடியும்.

யாருக்கு எந்தத் துறையில் விருப்பம் இருக்கிறதோ, அந்தத் துறையில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். சிலருக்கு விளையாட்டுத்துறையில் ஆர்வம் இருக்கும். சிலர் அழகாகப் படம் வரைவார்கள். சிலர் படைப்பாக்கத் திறன் பெற்றிருப்பார்கள். மாணவர்களின் தனிப்பட்ட திறமைகளை, விருப்பங்களைத் தெரிந்து கொண்டு அவற்றை வளர்க்கும்விதமாக அவர்களுக்கேற்ற கல்வியைக் கொடுக்க வேண்டியது அரசின் கடமை. அப்படிச் செய்தால் மாணவர்கள் உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும், எம்மாதிரியான சூழல்களைச் சந்திக்க நேர்ந்தாலும், எப்படிப்பட்ட சவாலாக இருந்தாலும் உறுதியாகச் சமாளித்து வெற்றிச் சிகரத்தைத் தொட்டுவிடுவார்கள்.

தகவல் தொழில்நுட்பம் (IT) வளர்ந்துவிட்ட சூழ்நிலையில் நமது இளைஞர்கள் அவற்றை நன்கு கற்றுக் கொண்டு, உலகெங்கும் சென்று பணி செய்வதை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ஐடி துறையைப் போலவே எல்லாத் துறைகளிலும் நாம் வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும்.

ஆனால் நாம் இதற்கு நேர்மாறாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

நாடு சுதந்திரமடைந்த பிறகு, ஆண்டுக்கு ஒரு ஐஐடியை திறந்திருந்தால் கூட, நாடு முழுவதும் இன்று 70 ஐஐடிகள் இருந்திருக்கும். ஆனால் இப்போது வெறும் 22 ஐஐடி களே உள்ளன.

கல்விக்காகத் திட்டமிடுவது என்பது நம்மிடம் அறவே இல்லை.

இந்த ஆண்டு, இந்த வயதில் இவ்வளவு மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் அனைவரும் சிறந்த கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும். மாணவர்களின், இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கான சூழல்களை உருவாக்குவது அவசியம்.

பள்ளிகளில் முன்பெல்லாம் பலவித போட்டிகள் நடைபெறும். ஓவியப் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, விளையாட்டுப் போட்டி என பல போட்டிகள் நடைபெறும். இந்தப் போட்டிகளை பள்ளிகள்தாம் நடத்த முடியும்.

போட்டிகளில் வெற்றி, தோல்விகள் சகஜம் என்பதால், வெற்றி, தோல்விகளைப் பற்றி மாணவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். இரண்டையும் சரி சமமாகப் பார்ப்பார்கள். ஆனால் இன்று நிலைமை என்ன?

மாணவர்கள் நன்றாகப் படிக்க வேண்டும். நிறைய மார்க்குகள் எடுக்கவேண்டும். மார்க்எடுக்கும் ரோபோவாக மாணவர்களை நாம் உருவாக்கிவிட்டோம். அதன் விளைவு என்னவென்றால், தேர்வில் நினைத்த மதிப்பெண்கள் கிடைக்கவில்லை என்றாலோ, விரும்பிய படிப்பு கல்லூரியில் கிடைக்கவில்லை என்றாலோ மாணவர்கள் மனம் உடைந்து போகின்றனர். சிலர் உயிரையே மாய்த்துக் கொள்கின்றனர். இந்நிலையை மாற்ற வேண்டும். அதற்கு கல்வியைத் தரப்படுத்த வேண்டும். மாநில கல்வித்துறையோ, மத்திய கல்வி அமைச்சகமோ கல்வியைத் தரப்படுத்துவதற்குத் திட்டமிட்டு செயல்பட வேண்டும். என்ன மாதிரியான கல்வி கற்றுத் தர வேண்டும் என்று திட்டமிடும்போது பாடத்திட்டம் சார்ந்த கல்விச் செயல்பாடுகள் (Co-curricular Activities) பற்றி மட்டுமல்ல, பாடத்திட்டத்துக்கு அப்பாலும் உள்ள செயல்பாடுகள் (extracurricular activities) பற்றியும் திட்டமிட வேண்டும்.

பாடத்தைத் தாண்டி மாணவர்களின் திறமைகளை உருவாக்கக் கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் தங்களுக்கும் ஒரு திறமை இருக்கிறது; அந்தத் திறமையினால் வாழ்க்கையில் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் இருப்பார்கள்.

(தொடரும்)

கட்டுரையாசிரியர்: சமூக கல்வி ஆர்வலர்
www.indiacollegefinder.org